Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# முற்றம்:பண்பாட்டின் மீட்சி

முனைவர் த. பூவை சுப்பிரமணியன்
தமிழ் பயிற்றுநர், எம்.ஐ.டி. வளாகம்
குரோம்பேட்டை. v.p.manian@gmail.com

63

**ஆய்வு நோக்கம்**

மாந்தன் நிலையான குடியிருப்புகளை முதன் முதலில் திணை வாழிடங்களில் அமைத்துக் கொண்டான். இயற்கையைப் புரிந்து அதற்கேற்ப இயற்கை நெறி வாழ்வியலை வாழத் தொடங்கினான். வீடு இளைப்பாருவதற்கும் வீட்டின் முன் பகுதி புழங்கிடமாகவும் மாற்றிக்கொண்டான். இந்த முன் பகுதியே முற்றம் எனும் சொல்லால் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. **தமிழர் கட்டிடக்கலைத் தொழில் நுட்பத்தில் முற்றம்; தொழில் நுட்பம் சார்ந்தும் பண்பாட்டு மீட்சியாகவும் இருப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வரைவு அமைகிறது.**

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் தோன்றிய தொல்குடிகளுள் தமிழ்க் குடி தனித்தப் பண்புகளையும் வாழ்வியல் முறைகளையும் கொண்டதாக உள்ளது. இயற்கையிடம் கற்று இயற்கை வாழ்வியலை தமிழன் மேற்கொண்டான். வாழ்விடங்களையும் ஐவகை நிலத்தில் அமைத்துக் கொண்டான். குரம்பை, குடில், பரண் எனத் தொழில் நுட்பச் சிந்தனை வளர்ச்சிக்கு ஏற்ப வாழிடத்தையும் உருவாக்கிக் கொண்டான். வீடும் வீட்டின் முன் பகுதியும் தனக்குரியதாக அழகுப்படுத்திக் கொண்டான். வீட்டின் முன் பகுதியே முற்றம் எனச் சங்க இலக்கியங்களிலும் அதற்குப் பின்னர் வந்த இலக்கியங்களிலும் வாய்மொழியாகவும் கூறப்பட்டுள்ளன. இத்தகைய முற்றம் கட்டிடக்கலைத் தொழில் நுட்பத்தில் பண்பாட்டு அடையாள நீட்சியாகக் கருதப்படுகிறது; ஆகவே இத்தகைய சிந்தனையினை பதிவிடும் முறையாக இவ்வரைவு அமைகிறது.

**கருத்தரங்க அழைப்பிதழில் உள்ள தலைப்புகளில் 9ம் தலைப்பாக இக்கட்டுரை அமைகிறது.**

**முற்றம் : பண்பாட்டு மீட்சி**

அலைகுடிகளாக வாழ்ந்து திரிந்த மாந்தன் பல்வேறு படிநிலை வாழ்க்கை முறைகளைக் கடந்து ஓரிடத்தில் சமூகம் என்கிற அடையாளத்துடன் நிலையான குடியிருப்புகளை அமைத்துக் கொண்டான். தமிழர் தம் குடியிருப்புகளை ஐவகை நிலங்களிலும் நிறுவி வாழ்ந்ததன் மூலம் இக்காலத்தை இயற்கை நெறி காலம் என அறிஞர் வேலுப்பிள்ளை வகைப்படுத்துவார். ஐவகை நிலங்களிலும் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கவர்ந்து தன் தொழில்நுட்பச் சிந்தனைக்கு ஏற்ப வீடுகளை மக்கள் அமைத்துக் கொண்டனர். இதனால் தான் குரம்பை, குடிசை, பரண்,மனை, இல் என வீடுகளுக்குப் பல்வேறு பொதுப் பெயர்கள் இலக்கியங்களிலும் பொதுமைகளிலும் காணக்கிடக்கின்றன.

நிலையான குடியிருப்புகளை அமைத்துக் கொண்ட மாந்த சமூகம் வீட்டுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை போல அதன் முன் பகுதியான வெளிக்கும் கொடுத்தது. இந்த வெளிப்பகுதி தான் முற்றம் என அழைக்கப்பட்டது. சங்க காலம் கொண்டு வீட்டின் முற்றம் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் மிகுந்து காணப்பட்டாலும் நவீன காலத்தில் அது சார்ந்த பதிவுகள் குறைந்த நிலையிலும் வாய் மொழியாக மிகுதியான செய்திகளும் கிடைக்கின்றன. இத்தகைய முற்றம் பற்றிய கருத்தாக்கங்களை இவ் வரைவானது சில முன் முடிவுகளுடன் ஆராய்கிறது.

**முற்றம்:நுவலும் பொருள்**

வீட்டின் முன் பகுதியான முற்றம் குறித்து தமிழ் அகராதியானது **வீட்டின் முன் பகுதியில் வாசலை ஒட்டிய திறந்த வெளிப்பகுதி (Open Courtyard:in side)**எனத் தற்காலத் தமிழ் அகராதி பொருளுரைக்கிறது. சங்க இலக்கியங்களில் முற்றம் குறித்து **32 இடங்களில்** பதிவு செய்யப்பட்டுள்ளன.(**பார்க்க:பிற்சேர்க்கை**)பத்துப்பாட்டு இலக்கியமான முல்லைப்பாட்டில் முற்றம் என்பது

**உவலைக் கூரை ஒழுகிய தெருவிப்**
**கவலை முற்றம் காவல் நின்ற** (29-30)

நான்குத் தெருக்கள் கூடும் நாற்சந்தி பொதுவெளியை முற்றம் என நப்பூதனார் குறிப்பிடுகிறார். நெடுநல்வாடையானது,

**நிலவுப் பயன் கொள்ளும் நெடுவன் முற்றத்து** (95)

என நக்கீரர் முற்றம் திறந்த வெளியாய் இருப்பதைக் கண்டு **நிலா முற்றம்** எனப் பதிவு செய்கிறார். எனவே முற்றம் என்பது திறந்த வெளி அதாவது மக்கள் பயன்படுத்தும் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள பகுதி என வரையறை செய்யலாம்.

**சிறப்பு**

புதிதாகச் செய்வதை சிறப்பு எனக் குறிப்பிடலாம். மக்கள் தங்கள் கட்டிய வீடுகளின் அழகினை சிறப்புப்படுத்துவது முற்றமாகும். சங்க காலத்தில் இத்தகைய முற்றங்களபுலவர்களின் பாடல்கள் மேற்கோளிடுகின்றன.பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையனின் முற்றமானது,

**தொய்யா வெறுக்கையோடு துவன்றுபு குழிசி**
**செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்து** (434-35)

திரையனின் அன்பையும் அருளையும் பெறுவதற்காக பிற மன்னர்கள் அவனின் முற்றத்தில் காத்துக்கிடந்தனர் என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் தம் பாடல் வரிகளில் சிறப்பிக்கிறார். மலைபடுகடாம் இலக்கியத்தில்

**தாது எறுத் ததைந்த முற்றும் முன்னி** **(**531)
**திருநகர் முற்றம் அணுகல் வேண்டி** **(**548)

நன்னன் செய் நன்னனின் நவிர மலை நாட்டு முற்றத்தில் சான்றோர்கள் குழுமியிருந்தனர் எனும் செய்தியை பெருங்கௌசிகனார் பதிவிடுகிறார்.

**நல் நகர் மரந்தை முற்றத்து ஒன்னார்** (அகம் :127 - 6)

சேர மன்னன் படை நடத்தித் திரையாகப் பெற்ற பொன்னெல்லாம் அரண்மனை முற்றத்தில் குவித்து வைத்திருந்தான் எனும் செய்தி அறிய முடிகிறது. இங்குப் புலவர்கள் அரண்மனையை சிறப்பிப்பதை விடவும் அதன் முன் பகுதியான முற்றத்தினை மேன்மையாக்குவதை உணர முடிகிறது. தற்காலத்திலும் வீட்டின் நிகழ்வுகளை முற்றத்தில் நடத்தி சிறப்பிக்கின்றனர்.

**அமைப்பு**

வீட்டின் அழகுக்கு முன் பகுதியில் இருக்கும் முற்றமே காரணமாகின்றது. முற்றம் எப்போதும் தூய்மையானதாகவே இருந்துள்ளது.

**பெயின் மணல் முற்றம் கவின் பெற இயற்றி** ( ஐங்: 248:1)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

வீட்டின் முற்றத்தில் புது மணல் பரப்பி அழகுப்படுத்தி இருந்தனர். அழகிய மணல் நிரம்பிய முற்றத்தில் வண்டினங்கள் ஆரவாரித்தன என்று மதுரைக்காஞ்சியில் (684 - 85) மாங்குடி மருதனார் முற்றத்தின் அமைப்பினை எடுத்துரைக்கிறார்.

**உவமை**

கவிஞர்கள் தங்களுக்குப் பிடித்த ஒன்றினை எதன் மீதாவது ஏற்றிக் கூறி அதனை அழகூட்டுகின்றனர். தொல்காப்பியர் போல, புரைய, ஒப்ப, மான என உவமைக்கு இலக்கணம் கூறி மெருகேற்றுகிறார். இதே போல் தண்டியலங்காரத்திலும் உவமை அணி மூலம் கவிஞன் தான் கூற வந்த கருத்தினை அவன் விரும்பும் ஏதாவது ஒன்றின் மீது கூறி விளக்குகிறார். இலக்கியங்களிலும் முற்றத்தை உவமை வடிவமாகப் புலவர்கள் பதிவிட்டுள்ளதை அகநானூறு வெளிப்படுத்துகிறது.

**ஏந்து முலை முற்றம் நீங்க பல் ஊழ்** (51 : 11)

தலைவியின் மார்பானது அண்ணாந்து பார்க்கும் பெரும் முற்றமாக இருந்தது என்பதை புலவர் உவமிக்கிறார். இதே போல அகநானூறு 265 - 15, 279 - 5, 36 -15, 362 - 12 பாடல்களிலும் மகளிரின் மார்புக்கு முற்றத்தை உவமையாக்குகின்றனர்.

**பெருமை**

இருப்பதை சிறப்பித்துக் கூறுதல் பெருமையாகும். வீடானது சிறியதாகவோ பெரியதாகவோ இருந்தாலும் முற்றம் பெரிதாக இருப்பின் அதுதான் பெருமை என நவீன காலத்தில் கிராமங்களில் இப்படி ஒரு சிந்தனை உள்ளது. கால்நடைச் சமூகத்தில் முற்றம் மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்டதை புறநானூற்று பாடல் மூலம் அறியலாம்.

**வரையா பெருஞ்சோற்று முறிவாய் முற்றம்** (261 - 3 )

ஆநிரைப் போர் காலங்களில் கரந்தையரின் முற்றம் வருவோர்க்கெல்லாம் உணவு வழங்கியதால் தேய்ந்து போய் இருந்தது. மன்னர்களின் தேர்களும் குதிரைகளும் முற்றத்தில் குழுமியிருந்தன.

**மணல் வழிமுற்றம் புக்க சான்றோர்** (புறம் - 178 :3)

பாண்டியனின் விரைந்த குதிரைகள் அவன் முற்றத்தில் ஆரவாரித்தன என்று புலவர் பதிவு செய்கிறார். முற்றத்தில் வைத்து போர் முரசு கொட்டியதையும் பாடல்களில் செய்தி இடம் பெறுகிறது.

**முனிவு இல் முற்றத்து இனிது முரசு இயம்ப** (புறம்- 29 : 8 )

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சோழ மன்னன் மாளிகையின் முற்றத்தில் இனிய முரசு கொட்டியது எனும் செய்தியை மற்றொரு பாடலும் ( 174 - 7) தருகிறது.

**பயன்பாடு**

வீட்டின் முற்றமானது மனிதர்கள் விலங்குகள் பறவைகள் என அனைத்து உயிரினங்களுக்குமானதாக உள்ளன. நிலத்தில் விளைந்த பொருட்களை உலர வைக்கும் இடமாக முற்றம் உள்ளது. பட்டினப்பாலை முற்றத்தின் பயன்பாட்டைக் கூறும் போது

**அகல் நகர் வியன் முற்றத்து** ( 20 )

**தன் கேணித் தொகை முற்றத்துப் (**51)

எனப் பெரிய வீடுகளின் முற்றத்தில் காய வைத்திருக்கும் உணவுப் பண்டங்களைத் தின்ன வரும் கோழிகளை விரட்ட பெண்கள் காதணிகளை வீசி எறிந்தனர் இதன் மூலம் நிலத்தில் விளைந்த உணவுப்பொருட்ளை உலர வைக்கும் இடமாக முற்றம் இருந்ததைக் காண முடிகிறது.

**விளையாட்டு**

வீட்டின் முற்றமானது விளையாடும் களமாக இருந்தது. குழந்தைகள் சிறார்கள் நெடுந்தூரம் சென்று விளையாட முடியாத சூழலில் வீட்டின் முற்றத்தில் விளையாடினர். பெண்கள் வெளியில் செல்ல முடியாத நிலையில் முற்றத்தில் விளையாடிய செய்தியை இலக்கியங்கள் தருகின்றன.

**மணல் மலி முற்றத்து நிலா வடுக் கொளஅ** (புறம்: 254 - 4)

மணல் முற்றத்தில் இளம் பெண்கள் ஓடியாடி விளையாண்டனர். முற்றத்தில் ஓரை விளையாட்டு விளையாடியதை நற்றிணை குறிப்பிடுகிறது.

**தருமனல் ஞெமிரிய திரு நகர் முற்றத்து** (புறம்:143 - 2 )

பெண்கள் கூட்டமாக இருந்து விளையாடினர்.தற்காலத்தில் கிராமங்களில் மணல் விளையாட்டு எனும் பெயரில் நடைபெறுகிறது.

**நெடுந்தேர் வழங்கும் நிலவு மணல் முற்றத்து**

**பந்தொடு பெயரும் வரிவிலாட்டி** (புறம்.140 :6- 7)

நெடிய தேர் செல்லும் மணல் நிரம்பிய முற்றத்தில் தோழியருடன் தலைவி பந்து விளையாடினாள் மேலும் பாடல் 268 - 8 இதே செய்தியைத் தருகிறது. பெண்கள் தங்கள் வயதையொத்தவர்களுடன் கூட்டமாகச் சேர்ந்து பந்து , ஓரை

,புதுப்புனல், பாவை, கழங்கு போன்ற விளையாட்டுகளை விளையாடினர் இதில் மிகுதியான விளையாட்டுகளின் களமாக முற்றமே இருந்தது என்பது அறியப்படுகிறது.

**விழாக்கள்**

சங்ககாலத்தில் விழாக்கள் ஊர்ப் பொதுவிடம் மற்றும் முற்றங்களில் நடைபெற்றன.

**தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்** (புறம்:187 - 9)

அகநானூற்றில் பெண்கள் **பூந்தொடை விழாவினை** முற்றத்தில் புது மணல் பரப்பி கொண்டாடினர் எனும் செய்தி உள்ளது. சங்ககாலத்தில் தங்களின் பொழுதுபோக்கு கலை சார் வெளிப்பாடுகளை வீட்டின் முற்றத்தில் அமைத்துக் கொண்டனர்.

**புனித நிலை**

முற்றம் தமிழ் மக்களால் புனிதப்படுத்தப்பட்ட இடமாகப்பார்க்கப்படுகிறது. காலையில் எழுந்தவுடன் கிராமத்தில் மாட்டுச்சாணம் தெளித்து கோலமிடும் பழக்கம் உள்ளது. நகர்ப்புறங்களிலும் காலை மாலை என இரு வேளைகளிலும் முற்றம் தெளித்து கோலமிடும் பழக்கம் இருந்து வருகிறது. மிகப் பெரிய மாடமாளிகை அமைப்புக்களுடன் வீடு கட்டினாலும் அதன் முற்றம் தான் அந்த வீட்டினைப் புனிதப்படுத்துகிறது என்பதை உணரலாம்.

**நவீன காலம்**

நவீன காலம் கிராமம் நகரம் என இரண்டு நிலைகளுமே இயந்திரகதிக்குள் சிக்கியுள்ளது. கிராமங்களில் மாலைப் பொழுதில் முற்றங்களில் சாப்பிடுதல், குழுமிப் பேசுதல், விளையாடுதல்,தூங்குதல் என மக்களின் உறவுப் பிணைப்பாக இருந்து வருகிறது. வீட்டின் முக்கிய விழாக்கள் சடங்கு முறைகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் முற்றத்திலேயே நடைபெறுகின்றன. நகரமயமாக்களின் மூலம் இத்தகைய அமைப்பு முறை காணமல் வாகனங்கள் நிறுத்தும் இடமாக காட்சியளிக்கின்றன.

**இறுதியாக**

வீட்டின் முற்றமானது வீடுகளுக்கு அமைப்பாகவும் பெருமையாகவும் இருந்து வருவதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

மன்னர்களும் சான்றோர்களும் குழுமி இருக்கும் இடமாக முற்றம் இருந்தது என்பதை அறிய முடிகிறது.

விளையாட்டுக்கள் விழாக்கள் பொழுதுபோக்குகள் நடைபெறும் களமாக முற்றம் இருந்ததை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

முற்றம் அமைப்பு முறையானது நமது உறவுமுறையின் அடையாளமாக இருந்து வருகின்றது. இவ்வமைப்பானது காணமல் போவதை பண்பாட்டு நெருக்கடி என்று அழைக்கலாம்.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்**

**முதன்மை நூல்கள்**

1.பரிமணம்,அ.மா;2011:**எட்டுத்தொகை**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

2.பரிமணம்,அ.மா;2011:**பத்துப்பாட்டு**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

**துணைமை நூல்கள்**

1. மாதையன்,பெ; 2007: **சங்க இலக்கியச் சொல்லடைவு**, தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்
2. **க்ரியா தற்காலத் தமிழ் அகராதி**;2004: சென்னை.

**தகவலாளிகள்**

1. தங்கையா, ஆ ; ஆண், 68, விவசாயி, வேலாயுதபுரம் , தென்காசி மாவட்டம்.
2. முருகம்மாள், தி; பெண், 60, விவசாயி, வேலாயுதபுரம்.
3. சிவசைலம், ஆண், 72, விவசாயி, வேலாயுதபுரம்.
4. புஷ்பவள்ளி, பெண், 70, விவசாயி,வேலாயுதபுரம்.

**பிற்சேர்க்கை**

**முற்றம் 32**

**பெரும்.** 435,**முல்லை** 30, **மதுரைக்.** 684, **நெடுநல்.** 90,95 **பட்டினப்.** 20,51,**மலைபடு**. 531,548, **நற்.** 140-6,143-2,191-3,268-8, **ஐங்** 248-1,**பதிற்** 64-6, **பரி.திர.** 2-72,**கலித்.** 81-7,96-23,**அகம்.** 51-11,127-6,187-9,254-4,265-15,279-15,361-5,362-12, **புறம்.** 29-8,174-7,178-3,241-3,373-24,390-4.